SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Advanced Level
Higher 3

**9941/2**

# தமிழ்மொழி, இலக்கியம்

தாள் 2

**TAMIL LANGUAGE AND LITERATURE**

Paper 2

SPECIMEN PAPER

*With effect from 2026 examination*

**1 hour 45 minutes**

Additional Materials: Main Answer Booklet L

---

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் அனைத்தையும் விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.

2 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்.

இவ்வினாத்தாள் 7 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 1 அச்சிடப்படாத பக்கத்தையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

### திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (பரிந்துரைக்கப்பட்டுள்ள நூல்கள்)

பின்வரும் 1 முதல் 4 வரையுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை எழுதவும். (25 மதிப்பெண்கள்)

**தூண்டில் மீன்**

**1** ‘பாதை தவறிய பயணம்’ என்னும் சிறுகதையில் இடம்பெறும் நல்லதம்பி, ‘எண்ணங்கள் நிலையானவை அல்ல’ என்னும் சிறுகதையில் இடம்பெறும் நல்லதம்பி ஆகியோரது பண்புநலன்களை ஒப்பிட்டு ஆராயவும்.

**2** அன்றாட வாழ்வில் காணக்கூடிய நிகழ்வுகளைத் தம் படைப்பாற்றலால் அசாதாரணமான முறையில் கதைகளாக்கிக் காட்டக்கூடிய வல்லமை படைத்தவர் கதாசிரியர் மா. இளங்கண்ணன் என்பதை ‘வெளிச்சத்தை நோக்கி’ என்னும் சிறுகதை வாயிலாக நிறுவவும்.

**தமிழின்பம்**

**3** புலவர்கள் சுயநலமில்லாது பிறர் நலம் காத்தவர்கள் என்னும் உண்மையை ‘வண்மையும் வறுமையும்’ என்னும் கட்டுரையின் வழிநின்று நிறுவவும்.

**4** வள்ளல் பாரியின்மீது கபிலர் கொண்டிருந்த அன்பின் திறத்தைச் சான்றுகள் தந்து விளக்கவும்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

# 'ஆ' பிரிவு

**திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு**

பின்வரும் 5, 6 ஆகிய இரு வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை எழுதவும். (25 மதிப்பெண்கள்)

**5** பின்வரும் கவிதை உணர்த்தும் பொருள் பற்றியும் அதன் நயம் பற்றியும் திறனாய்வு நோக்கில் விளக்கி எழுதவும்.

கடல் வானைக் காணும் பேட்டி

வானதேவனே! இந்த உலகிற்காக
உங்கள் சொந்த வரலாற்றைச்
சுருக்கமாகச் சொல்லவேண்டுமே…
அதற்கென்ன பெண்ணே
இயற்கையின் தலைப்பிள்ளை நான்
என் உடன்பிறந்தவர்கள்
உலகெங்கும் வாழ்கிறார்கள்
தென்றல் என் மொழி
அடிக்கடி அலைந்து மடங்கும்
மேகங்களே என்கைகள்
இந்தப்பூமி
என் கைகளை எதிர்பார்த்தே வாழ்கிறது
இந்தமண்ணை
ஆக்கவும் அழிக்கவும் காக்கவும் வாழும்
நீலதேவன் நான்; நித்தியமானவன்

இந்த உலகத்தை ஓய்வில்லாமல்
காக்கும் உங்களுக்குக் களைப்பே வராதா?
படுத்துக்கொண்டுதானே காக்கிறேன்!

நீங்கள் அடிக்கடி பார்த்துவியப்பது?
என் பரந்த நெஞ்சையும்
உன் ஆழ்ந்த நெஞ்சையும்
பலமுறை பார்த்தும்கூட
இந்தப் பாவிமனிதர்கள்
குறுகிய நெஞ்சோடு பவனிவருவதை

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

அதுசரி . . . அவ்வப்போது இந்த மண்ணின்மேலே
உங்கள் நட்சத்திரவிழிகள்
எரிந்து விழுவது...?

அது கோபமில்லையடி
என் உடம்பைக் கூரையாக்கி
அவலங்களோடு உறங்கிக் கிடக்கும்
அனாதை உயிர்களைப் பார்க்கும்போதெல்லாம்
என் நட்சத்திரவிழிகள் உதிர
நான் அழுதுவிடுகிறேன்

இந்த மனிதர்களுக்காக நீங்கள்
சொல்ல நினைப்பது?

அவர்கள் சிந்தனைகள்
என்னைப்போல் விரியவேண்டும்
செயல்கள்
உன்னைப்போல் பொங்கிவர வேண்டும்.

**- பொன்மணி வைரமுத்து**

**6** பின்வரும் சிறுகதை உணர்த்தும் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, மொழிநடை, ஆசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றைப் பற்றித் திறனாய்வு நோக்கில் விளக்கி எழுதவும்.

<u>தெரு விளக்கு</u>

தெருக் கோடியிலே அந்த மூலை திரும்பும் இடத்தில் ஒரு முனிசிபல் விளக்கு.

தனிமையாக, ஏகாங்கியாகத் தனது மங்கிய வெளிச்சத்தைப் பரப்ப முயன்று வாழ்ந்து வந்தது.

இளமை, மூப்பு, சாக்காடு என்பவை மனிதருக்கு மட்டும் உரிமையில்லை. எனவே, தெரு விளக்கிற்கும் இப்பொழுது மூப்புப் பருவம்.

நிற்கும் கல் - உடம்பு சிறிது சாய்ந்துவிட்டது. சிரத்தில் இருந்த கண்ணாடிச் சில் ஒரு பக்கம் உடைந்துவிட்டது. அந்தச் சிறுவன் விளையாட்டாகக் கல்லை எறிந்தபொழுது விளக்கின் கஷ்டத்தை நினைத்தானா?

காற்று அடித்தால் உயிரை ஒரேயடியாகவாவது போக்கிவிடுகிறதா? குற்றுயிராய்த் துடிக்க வைத்து அதைக் கொல்லுகிறதே!

கொஞ்சமாவது மங்கிய வெளிச்சத்தைக் கொடுக்கிறதென்று இந்தக் காற்றிற்கு நன்றி இருக்கிறதா?

போய்விட்டது! பிறகு மழையில் அதன் குளிரை யார் கவனிக்கிறார்கள்?

அது காற்றிற்குத் தெரியுமா?

இனிமேல் விளக்கு அந்தப் பக்கத்திற்கு வேண்டாமாம்! அதை எடுத்துவிட வேண்டுமாம்!

அதற்கு ஒரு தோழன் - ஒரு கிழவன்.

ஒத்த வயதில்தானே நட்பு ஏற்படும். இதில் என்ன அதிசயம்!

விளக்கிற்குக் கிழவன்.

கிழவனுக்கு விளக்கு.

விளக்கை எடுத்துவிடப் போகிறார்கள் என்று கிழவனுக்குத் தெரியாது.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

அவனுக்கு எப்படித் தெரியும்.

அவன் வயிற்றுக்குப் பிச்சை எடுக்க வேண்டாமா?

வயிற்றுக்கில்லாமல் உயிர் வாழ முடியுமா?

தெருவிளக்கு அவன் தோழன்தான். அதன் வெளிச்சம் அவனுக்கு எவ்வளவு மன நிம்மதியை அளித்தது.

அன்று சாயங்காலம் வந்தான்.

வெறும் குழி ஒன்றுதான் இருந்தது.

இருள்! இருள்!!

பற்றுக்கோலை யாரோ தட்டிப் பிடுங்கிக் கொண்ட குருடனின் நிலை!

அன்று அவனுக்கு உலகம் சூனியமாய், பாழ்வெளியாய், அர்த்தமற்றதாய் இருந்தது.

சாந்தி?

அது எங்கிருந்து வரும்!

உடைந்த தெரு விளக்குத்தான்! ஆனால், கொஞ்சமாவது அவனைத் தேற்றிவந்ததே!

வெளிச்சமில்லாவிட்டாலும் ஸ்பரிசித்துப் பார்த்து ஆறுதலடைய வெறுங் கல்லாவது இருந்ததே?

மறுநாள் காலை கிழவனின் சவம் அங்குக் கிடந்ததைக் கண்டார்கள்.

************************************************************

இப்பொழுது ஒரு புது விளக்கு!

மின்சார விளக்கு!

அதன் கீழே குழந்தைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குப் பழைய விளக்கையும் பழைய கிழவனையும் பற்றிக் கவலை என்ன?

ஒரு காலத்தில் இவர்களும் அப்படித்தான் ஆவார்கள்!

அதற்கென்ன?

எங்கும், எப்பொழுதும் அப்படித்தான்.

பழையன கழியும், புதியன வரும்.

இது உலக இயற்கையாம்!

**- புதுமைப்பித்தன்**

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.